சுருக்கம்

அறிவிப்புகள் 2021–2022 – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து பயிற்சி வழங்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு அளித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (எம்.2) துறை

அரசாணை (நிலை) எண். 176

நாள்: 20.11.2021
பிலவ வருடம், கார்த்திகை 4
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்க:

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ.), சென்னை–32 அவர்களின் கடித எண்.H2/17431/2021, நாள் 08.09.2021 மற்றும் 11.10.2021

--------

ஆணை:–

2021–2022–ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பின்னர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் 04.09.2021 அன்று சட்டமன்ற பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார் :–

> பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் முதலீட்டினால், புதிய தொழில்நுட்பங்களும், செயல்முறைகளும் நமது நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அபாயகரமான இரசாயனங்களை பயன்படுத்தி பல நவீன உற்பத்தி செயல்முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இச்செயல்முறைகளினால், பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படைய வாய்ப்புள்ளது. சமீபத்திய தொழில்நுட்ப மேம்பாடுகளையும், உலகத் தர பாதுகாப்பு உத்திக்கான பாதுகாப்பு வல்லுநர்களைக் கொண்டு, இயக்கக அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து ஆய்வின் தரத்தை மேம்படுத்துவதுடன் தொழிற்சாலை பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இப்பயிற்சி 25 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

(த.பி.பா.)

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்கள் தமிழ்நாட்டில் 1,765 ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளும், 10,663 அபாயகரமான தொழிற்சாலைகளும், 174 பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளும் உள்ளதாகவும், ஊறுவிளைவிக்கும், பெரும் விபத்து, இடர்தரு தொழிற்சாலைகளில் வெவ்வேறு விதமான செயல்முறைகள் நடைபெறுவதால் பல்வேறு விதமான பாதுகாப்பான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியுள்ளதாகவும், இப்பாதுகாப்பு வழிமுறைகள், கையாளப்படும் இரசாயனங்களின் தன்மைகேற்ப மாறுபடுவதாகவும், இரசாயனங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வேதிவினைகள் சில வெப்ப உமிழ்வினைகளாக (exothermic reaction)–ஆக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் அவர், மேற்கூறிய வேதிவினைகளின் போது உருவாகும் வாயுக்கள் எவை, அவை எவ்வாறு பாதுகாப்பாக தொழிற்சாலையில் நடுநிலைப்படுத்தப்படுகிறது (neutralise) மற்றும் தொழிற்சாலைகளில் பின்பற்றப்படும் வழிமுறைகள் பாதுகாப்பானதாக உள்ளதா என்பது தொடர்பாக தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து, இரசாயன தொழிற்சாலைகளில் உற்பத்தி தொடங்கும் முன் செயல்முறைகளில் நிறைந்துள்ள அபாயங்களை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படும் உத்திகள் மற்றும் பல்வேறு அபாயங்களை கண்டறியும் உத்திகள் மூலம் இடர் மதிப்பீடு செய்வது குறித்த அடிப்படை பயிற்சி இயக்கக அலுவலர்களுக்கு வழங்குவது அவசியமாகிறது என்பதால், இரசாயன பாதுகாப்பு, ஊறுவிளைவிக்கும் செயல்முறை, இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது போன்றவற்றில் தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு இயக்கக அலுவலர்களுக்கு பயிற்சியளிக்க அனுமதி மற்றும் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு அளிக்குமாறு அரசை கேட்டுக்கொண்டிருந்தார்:–

| | | |
|---|---|---|
| பயிற்சி வழங்கும் 1 வல்லுனருக்கு, 1 மணி நேரத்திற்கு செலவு விவரம் | ரூ.5,000/– | |
| 3 மணி நேரத்திற்கு ஆகும் செலவு விவரம் | ரூ.5,000/– x 3 = 15,000/– | |
| 4 வல்லுனர்களுக்கு 12 மணி நேரத்திற்கு (6 மணி நேரம் X 2 = 12 மணி நேரம்) ஆகும் (1 தொகுதி அலுவலர்களுக்கு) செலவு விவரம் | ரூ.15,000/– x 4 = 60,000/– | ரூ.3,00,000/– |
| 122 அலுவலர்களுக்கு 5 தொகுதியாக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கான செலவு விவரம் | ரூ.60,000/– x 5 = 3,00,000/– | |
| வல்லுநர்கள் தங்குவதற்கான விடுதி செலவு | | ரூ.2,00,000/– |

| | | |
|---|---|---|
| கையேடு தயாரிப்பதற்கு ஆகும் செலவு | | ரூ.1,00,000/- |
| புத்தகங்கள் வாங்குவதற்கான செலவு (Including GST) | | ரூ.2,00,000/- |
| LCD Projector with accessories (PA system with Mike, Screen) (Including GST) (5 set) | | ரூ.15,00,000/- |
| இதர செலவுகள் | | ரூ.2,00,000/- |
| மொத்தம் | | ரூ.25,00,000/- |

4. மேற்காணும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு நவீன உற்பத்தி செயல்முறைகளில் இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து பயிற்சி வழங்கி, ஆய்வின் தரத்தை மேம்படுத்தி தொழிற்சாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்திட கீழ்கண்டவாறு ரூ.22,00,000/-க்கு (ரூபாய் இருபத்திரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடுகிறது.

| விவரம் | | தொகை (ரூ.) |
|---|---|---|
| பயிற்சி வழங்கும் 1 வல்லுனருக்கு, 1 மணி நேரத்திற்கு செலவு விவரம் | ரூ.5,000/- | 3,00,000/- |
| 3 மணி நேரத்திற்கு ஆகும் செலவு விவரம் | ரூ.5,000/- x 3 = 15,000/- | |
| 4 வல்லுனர்களுக்கு 12 மணி நேரத்திற்கு (6 மணி நேரம் X 2 = 12 மணி நேரம்) ஆகும் (1 தொகுதி அலுவலர்களுக்கு) செலவு விவரம் | ரூ.15,000/- x 4 = 60,000/- | |
| 122 அலுவலர்களுக்கு 5 தொகுதியாக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கான செலவு விவரம் | ரூ.60,000/- x 5 = 3,00,000/- | |
| வல்லுநர்கள் தங்குவதற்கான விடுதி செலவு | | 1,00,000/- |
| LCD Projector with accessories (PA system with Mike, Screen) (Including GST) (5 set) | | 15,00,000/- |
| கையேடு தயாரித்தல், புத்தகங்கள் வாங்க, (Including GST) மற்றும் இதர செலவினங்கள் | | 3,00,000/- |
| மொத்தம் | | 22,00,000/ |

(த.பி.பா.)

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| கணக்கு தலைப்பு | தொகை (ரூபாயில்) |
|---|---|
| 2230 தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு – 01 தொழிலாளர் – 102 வேலை நிலைமைகளும் பாதுகாப்பும் – மாநிலச் செலவினங்கள் – AB தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வாளர் 301 சம்பளங்கள் – 04 ஏனையபடிகள் (IFHRMS த.தொ.கு.2230 01 102 AB 30104) | 3,00,000/– |
| 2230 தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு – 01 தொழிலாளர் – 102 வேலை நிலைமைகளும் பாதுகாப்பும் – மாநிலச் செலவினங்கள் – AB தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வாளர் 305 அலுவலக செலவுகள்–02 ஏனைய சில்லறைச் செலவுகள் (IFHRMS த.தொ.கு.2230 01 102 AB 30502) | 4,00,000/– |
| 2230 தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு – 01 தொழிலாளர் – 102 வேலை நிலைமைகளும் பாதுகாப்பும் – மாநிலச் செலவினங்கள் – AB தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வாளர் 319 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (IFHRMS த.தொ.கு.2230 01 102 AB 31901) | 15,00,000/– |
| மொத்தம் | 22,00,000/– |

6. மேலும், மேற்காணும் பயிற்சி வழங்குவது தொடர்பான செலவினங்கள் மேற்கொள்வதிலும், செயல்படுத்துநரைத் தெரிவு செய்யும் போதிலும், தமிழ்நாடு 1998–ஆம் ஆண்டு ஒப்பந்த புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மைச் சட்டம், (Tamil Nadu Transparency in Tenders Act), 1998 உள்ளிட்ட சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். இச்செலவினத்தை மேற்கொள்ள இயக்குநர் (மு.கூ.பொ.), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள், நிதித் (வ.செ.பொது.1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு

தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள், 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொது.1)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு இயக்குநர் (மு.கூ.பொ.), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022–ஆம் ஆண்டிற்கான துணைமதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொது.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் (மு.கூ.பொ.), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.50724/2021, நிதி (தொ.ந.(ம).தி.மே.) நாள் 20.11.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான நிதியொதுக்க பேரேடு எண் 901 (தொள்ளாயிரத்து ஒன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா.கிர்லோஷ் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ.), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–32.
முதன்மை மாநில கணக்கு துறை தலைவர், சென்னை–18
சம்பளக் கணக்குகள் அலுவலர், சென்னை–9
சம்பளக் கணக்குகள் அலுவலர், சென்னை–8
தலைமையிடத்து தணிக்கை அலுவலர், சென்னை–9

நகல்:–
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளரின் முதுநிலைதனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு.2/எப்) துறை, சென்னை –9.
நிதித்(L.W. & S.D. மற்றும் BG–I/II) துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/உபரி நகல் /சுத்த நகல் (கோ.எண்.15261/எம்.2/2021)

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பே. முத்துராஜ் 20/11/2021
**பிரிவு அலுவலர்**